செ.வெ.எண்: 421/2016 நாள்: 05.07.2016

# கன்னியாகுமரிமாவட்டம் - ஓய்வூதியர்கள் நேர்காணல் தொடர்பாக.

மாவட்டக் கருவூலம், நாகர்கோவில் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் வாயிலாக ஓய்வூதியம் /குடும்ப ஓய்வூதியம் /சிறப்பு ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் வருடாந்திர நேர்காணலுக்கு இதுவரை வராதவர்கள் 22.07.2016-க்குள் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்திற்கு நேரில் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறும்பட்சத்தில் ஜுலை-2016 ஓய்வூதியம் நிறுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. மருத்துவ காப்பீடு அட்டை இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் சம்மந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு பெற்று கொள்ளவும். மே, ஜுன் மாதங்களில் மருத்துவ காப்பீடு அட்டை தொடர்பாக கருவூலம் வந்தவர்கள் மீண்டும் வர தேவையில்லை.

**கருவூலஅலுவலர்**

**நாகர்கோவில்**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.